வண்டலூர்-வாலாஜாபாத் சாலையில் கி.மீ. 63/2-ல் உள்ள இரயில்வே மேம்பாலம் (R.O.B) நான்கு வழிச்சாலையாக அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

9. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 5-8-2014 மற்றும் 6-8-2014 அன்று எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 6-8-2014 அன்று மட்டும் எடுத்துக்கொள்ளப்பெறும் என்று பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)–*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)–*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

***திரு. ஆர். ராமமூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை, பால் வளம், மீன் வளம் ஆகிய மூன்று துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*